# நப்பசலையார் காட்டும் அறிவுசார் மெய்யியலும் வரலாற்றுச் செய்திகளும்

**முனைவர் ம.தேவி**

**தமிழ்த்துறைத் தலைவர்**

**ஆதித்யா கலை மற்றும் அறிவியல் கல்லூரி,கோவை**

**devi.m@adithyacas.edu.in**

2

**ஆய்வுச்சுருக்கம்**

சங்க இலக்கியப் பெண்பாற் புலவர்களுள் தனித்துவம் வாய்ந்தவர் மறோக்கத்து நப்பசலையார். இவரது எட்டுப் பாடல்களிலும் வரலாற்றுச் செய்திகள் தவறாமல் இடம் பெற்றுள்ளது தனிச்சிறப்பாகக் கருதப்படுகிறது. நப்பசலையார் பாடல்களில் உள்ள சூழலியல், துணிவு, அறம்,இயற்பியல், வரலாற்று ஆராய்ச்சிக்குரிய வரிகள்,சேர, சோழ மன்னர்களது வரலாறுகள் ஆகியவை பற்றி ஆராயும் முகமாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகின்றது.

**திறவுச்சொற்கள்**

அறம், துணிவு, நப்பசலையார், ஒலிஅலைகள், கிள்ளிவளவன், துலாக்கோல், ஆராய்ச்சி,, வானவன், அசுணம், பசலைநோய், தூங்கெயில் கதவம், இமயம், கடல் நாவாய் ,கபிலன் ,மலையமான் மரபு போன்றவை.

**முன்னுரை**

மறோக்கத்து நப்பசலையாரின் நற்றிணை பாடலிலுள்ள பசலை நோய் பற்றிய புதிய பார்வை, மற்ற ஏழு புறநானூற்றுப் பாடல்களிலுள்ள வரலாற்றுச் செய்திகள், ஆராய்ச்சிக்குரிய செய்திகள், சேர,சோழ மன்னர்களின் வரலாற்று நிகழ்வுகள், அசுணமா என்னும் அரிய விலங்கு பற்றிய ஆராய்ச்சிக்குரிய செய்திகள் ஆகியவை பற்றி இவ்வாய்வுக் கட்டுரை வழி அறியலாம்.

**மறோக்கத்து நப்பசலையார்**

இவர் மறோக்கம் என்னும் ஊரில் பிறந்ததாலும் பசலைப் பற்றி நயமுறப் பாடியதாலும் மறோக்கத்து நப்பசலையார் என்னும் பெயரைப் பெற்றார். இவர் மறோக்கத்து என்னும் ஊரில் பிறந்ததற்குச் சான்றாக அவ்வூரில் வாழ்ந்த மற்றும் ஒரு புலவரான காமக்கணி நம்பாலத்தனார் என்னும் சோதிடரை அடையாளம் காட்டுகின்றனர் வரலாற்று ஆய்வாளர்கள். நப்பசலையார் தம் பாடல்களில் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன், மலையமான் திருமுடிக்காரி, மலையமான் சோழிய ஏனாதி, திருக்கண்ணன், வானவன், வளவன், செம்பியன், அவியன் ஆகிய மன்னர்களைப் பற்றியும், சங்க இலக்கியப் பெரும்புலவரான கபிலரைப் பற்றியும் குறிப்பிட்டுப் பாடியுள்ளார்.

**அசுணமும் பசலையும்**

இலக்கிய பாடல்களில் பசலை பற்றிய பாடல்கள் இடம்பெறுவது இயல்பான ஒன்றே. துணையின் பிரிவால் உடல் வெளிறும் பசலைப் பற்றி,

"பாலூர் நெருஞ்சிப் பசலை வான்பூ" **(புறநானூறு, பா.எ: 155)**

என்று புறநானூறும்,

“நிலத்தை நீள் பசலை பேரோர் விராகெனும் வேலின் வீழ”

**(சீவகசிந்தாமணி பா.எண்:3080)**

**எ**ன்று சீவக சிந்தாமணியும்,

"நயந்தவர்க்கு நல்காமை நேர்ந்தேன் பசந்தவென்
பண்பியார்க்கு உரைக்கோ பிற" **(திருக்குறள் :1183)**

என்று திருக்குறளும் பசலைநோயின் தன்மையைக் குறிப்பிட்டுள்ளன. அவற்றிலிருந்து சற்றே வேறுபட்டது நப்பசலையாரின் நற்றிணைப் பாடல். தலைவியின் பசலைநோயை ஒரு நயம் மிகுந்த உதாரணத்தோடு எடுத்தியம்பியுள்ளார். காற்றினால் ஒலி எழுப்பும் கொம்பு வாத்தியத்தை போல அருகருகே உள்ள மலைகளை உடைய மலைநாடனது மார்பைச்சேர்ந்தால் மட்டும் தலைவிக்கு அழகு கூடுவதாகவும், பிரிந்தால் நீலமணி இடையிட்ட பொன்னைப் போல அழகு குறைந்து பசலை அதிகம் ஆவதாகவும் பசலை நோயின் திறத்தை நயம்பட எடுத்துரைக்கிறார் ஆசிரியர் நப்பசலையார். பசலைநோயை அசுணமா என்னும் விலங்கோடு உதாரணம் காட்டுவது இப்பாடலில் தனிச்சிறப்பாக அமைகின்றது . இதை,

"அசுணம் கொல்பவர் கைபோல் நன்றும் தீதும்
இன்பமும் துன்பமும் உடைத்தேஉடைத்தே
தண் கமழ் நறுந் தார் விறலோன் மார்பே"

**(நற்றிணைப்பாடல் எண் :39)**

எனும் பாடல் தெளிவுறுத்துகிறது.

**அசுணமா என்னும் விலங்கு**

அசுணமா என்னும் விலங்கினப் பெயரின் வழி வரலாற்று ஆய்வாளர்களுக்கு ஒரு தேடலை ஏற்படுத்தியுள்ளார் நப்பசலையார். கற்பனை ஓவியங்களிலும் சிற்பங்களிலும் மட்டுமே காணக்கிடைக்கும் விலங்குகளில் இவ்விலங்கு மாறுபட்டு நிற்கிறது. ஏனைய விலங்குகளுக்குக் கிடைக்கக்கூடிய எலும்புக் கூடுகளோ, படிம அச்சுக்களோ இதற்கு இல்லை. இவ்வசுணமா வழி ஒலி அலைகள் பற்றிய இயற்பியல் அறிவை நப்பசலையார் நமக்கு அறிமுகம் செய்கிறார். ஒலி அலைகள் ஒரு பொருளின் அதிர்வினால் உண்டாகின்றன. மனிதனின் கேட்கும் திறனின் எல்லை நொடிக்கு 20Hz அதிர்வுகள் ஆகும்.

**(The nature of sounds physics hypertextbook: reading date: January 20.01.2022)**

விலங்குகளின் தனித்துவமான திறன்களில் மிக முக்கியமானவை செவிப்புலனும் நுட்பமான வாசனை உணர்வுமே ஆகும். நப்பசலையார் குறிப்பிடும் அசுணமா விலங்கானது மிதமான இசை ஒலியானது தனது காதில், வெகு தூரத்திலிருந்து கேட்டாலும் அதற்கு மயங்கி அவ்விசை ஒலிக்கும் இடத்திற்கு நெருங்கி வரும். அதிகப்படியான அதிர்வுகள் கேட்டால் இறந்து விடும். ஆனால் ஒலி அலைகள் அதிகமாகக் காதில் விழுந்தால் இறந்து விடும் விலங்காக அசுணமாவை அடையாளம் காட்டுகிறார் நப்பசலையார். இவர் சொல்லும் இதே கருத்தை ஈழப் புலவர் காமக்கணி நம்பாலத்தனார் என்னும் சோதிடரை அடையாளம் காட்டுகின்றனர் வரலாற்று ஆய்வாளர்கள்.

"இருஞ்சிறை தொழுதி ஆர்ப்ப யாழ்செத்து

இருங்கள்விடர் அளைஅசுணம் ஓர்க்குமே"

**(அகநானூறு: களிற்றுயானைநிரை:8-8)**

என்கிறது அவர் பாடல்.

அன்று முதல் இன்று வரை ஒரு அரிய விலங்கின இயற்பியல் ஆராய்ச்சிக்கு வித்திட்டதில் பெரும் பங்கு வகிக்கிறார் நப்பசலையார்.

**நப்பசலையார் கிள்ளிவளவனைத் துணிவுடன் சாடல்**

எண்ணிக்கையின் அடிப்படையில் குறைவாக இருக்கும் பெண்பாற் புலவர்களுள் ஒருவராக இருந்தும் அதைப் பெரிதும் பொருட்படுத்தாமல் சூழலைக் கருத்தில் கொண்டு அறநிலைமாறாமல் பெண்மைக்கே உரிய துணிவுடன் நின்று சோழன் குளமுற்றத்துத்துஞ்சிய கிள்ளிவளவனைப் புகழ்வது போல துணிவுடன் இகழ்ந்துள்ளார். போர்க்களத்தில் இல்லாமல் அகழிசூழ் கோட்டைக்குள் இருந்த மன்னனை அழிப்பது தவறு என்பதைப் புகழ்வது போல் இகழ்ந்து சுட்டிக்காட்டுகிறார் நப்பசலையார். இதை நஞ்சுடைய வெண்மையான பற்களையும், ஐந்து தலைகளையும் கொண்ட மிகச்சீற்றமும், சினமும் கொண்ட நாகப்பாம்பு புகுந்தது போலவும், பசுமையான கொடிகளை உடைய மலையின் பிளவுகளுக்குள் இடி விழுந்து தாக்கியது போலவும், புகுந்து அம்மன்னனுடைய கோட்டையை அளித்தாய் என்று கிள்ளிவளவனைப் புகழ்வது போல இகழ்ந்துள்ளார். இதில் நஞ்சுடையநாகம், இடிவிழுதல் போன்ற வார்த்தைகளால் நப்பசலையார் கிள்ளிவளவனைச் சாடுதல் தெளிவாகத் தெரிகிறது. இதை,

"வெந்திறல் நாகம் புக்கென " **( புறநானூறு: பாடல் எண்- 39)**

" உரும் எறிந் தாங்கு" **( புறநானூறு: பாடல் எண்- 39)**

எனவரும் புறநானூற்று வரிகள் நமக்கு எடுத்து இயம்புகின்றன. மேற்குறிப்பிட்ட செய்திகள் வழியும் பாடல்வரிகள் வழியும் சிபிச்சக்கரவர்த்தியின் மரபுவழி வந்த பெருமை மிகுந்தவராக இருந்தாலும் பல நாடுகளை வென்று தன் குடையின் கீழ் வைத்துள்ளவராக இருந்தாலும் முறையற்ற செயலைச் செய்தல் குற்றமே என கிள்ளிவளவனின் தவறை நப்பசலையார் சுட்டிக்காட்டியுள்ளது இவ்வாய்வின் வழி தெளிவாகிறது.

**சோழரின் ஆட்சியை நிலை நிறுத்திய வரலாறு**

நப்பசலையார் மலையமான் சோழிய ஏனாதி திருக்கண்ணனைப் பாடும் பொழுது இரு வகையான செய்திகளை வெளிப்படுத்தியுள்ளார்.

1. புராணக்கதை

2 .வரலாற்றுச் செய்தி

**புராணக்கதை**

அவுணர் என்போர் மண்மக்கள் ஒரு சமயம் மண் மக்களுக்கும் விண் மக்களுக்கும் இடையே போர் இடைவிடாது நிகழ்ந்தது. அப்பொழுது இரவும் பகலும் இடைவிடாது நிகழ்ந்தது மண்மக்களுக்கு இடையூறாக இருந்தது. அதனால் மண்மக்கள் இரவுபகலைத் தோற்றுவிக்கும் ஞாயிற்றைப் பிடித்து வந்து என்றும் பகலாக இருக்கட்டும் என்று விண்ணில் நிறுத்தினாராம் என்று சோழர் வரலாற்றுக்குப்

புரா

ணக்கதை ஒன்றை உதாரணம் காட்டுகின்றார் நப்பசலையார். அதாவது சோழரின் வெண்கொற்றக் குடையை நிலைநாட்டத் திருகிள்ளிவளவன் தோன்றியுள்ளார் என்கிறார் நப்பசலையார். இங்கே சோழன் சூரியகுலம் என்பது உயித்துணரத்தக்கது.

" அணங்குடை அவுணர் கணம்கொண்டு ஒலித்தன
சேண்விளங்கு சிறப்பின் ஞாயிறுகாணாது " **(புறநானூறு: பா.எண் -174)**

என்ற புறநானூற்று வரிகள் நமக்கு அந்தப் புராணக்கதையை எடுத்துக் காட்டுவதாய் அமைகின்றன.

**வரலாற்றுச் செய்தி**

திருக்கண்ணன் என்பவன் சோழர்படையின் தலைவன். சோழியஏனாதி என்னும் அடைமொழி, திருக்கண்ணன் சோழியப்படையின் தலைவன் என்பதை உணர்த்துகிறது. மலையமான் வழிவந்த குறுநில மன்னன் திருக்கண்ணன். சோழநாடு இழந்த ஆட்சியை மீண்டும் திருக்கண்ணன் சோழர் படையின் தலைவனாக இருந்து நிலைநிறுத்தியதால் சோழர்குலம் விளங்கக்கண்ணன் தோன்றியுள்ளான் என்று நப்பசலையார் குறிப்பிட்டுள்ளார். நப்பசலையார் காலத்தில் இருந்த சோழநாட்டு அரசியல் சூழலைக் கருத்தில்கொண்டு இந்தப் புறநானூற்றுப்பாடல் அமைந்திருக்கிறது. நப்பசலையார் என்னும் பெண்பாற்புலவர் சூழலைச் சார்ந்து பாட வல்லவர் என்பது இதன் வழி ஆய்ந்து கண்டறியப்படுகிறது.

**கபிலனும் நப்பசலையாரும்**

திருக்கோயிலூருக்கு அருகே இருக்கும் பண்டைய காலக்குன்று கபிலர் குன்று. சங்ககாலத்தில் மலையமான் மரபினர் இந்தப் பகுதியை ஆண்டு வந்ததாக இலக்கியங்கள் கூறுகின்றன. மலையமான் மரபைச் சேர்ந்தவர் திருமுடிக்காரி. இவர் சேர குறுநில மன்னர் வம்சத்தவர். ஆகையால் கபிலர் குன்றை ஆண்டு வந்தவர். திருமுடிக்காரியிடம் பாரியின் மகள்களை ஒப்படைத்துவிட்டுக் கபிலர் உயிர்நீத்த வரலாறு உண்டு. கொல்லிமலையைத் தன் நாட்டோடு கொண்டிருந்த வானவன் கடலில் தன் நாவாய்களை விட்டு அருகில் உள்ள நாடுகளை வென்று மலைபோல பொன்னையும் பொருளையும் கொணர்ந்து சேர்த்தவன். அப்படித் தன் நாவாய்கள் கடலோடும் பொழுதுகளில் வேறு யாருடைய நாவாயும் கடலில் வராமல் பார்த்துக் கொண்டான். அதைப்போலவே பாரிசில் வாங்க வந்தவர்களுக்கு, அவனிடம் பரிசில் பெற்றபின் வேறு யாரிடமும் பரிசில் பெறச்செல்லாத அளவிற்குப் பரிசில் வழங்கக்கூடியத் தன்மை பெற்றவராகத் திருமுடிக்காரி இருந்தார் என்று நப்பசலையார் குறிப்பிடுகிறார். மேலும் திருமுடிக்காரியின் வெற்றியைக் கபிலர் எனும் பெரும் புலவர் பாடி , அதற்குப்பிறகு நான் பாடுவதாகும் குறிப்பிட்டுள்ளார். இதை,

"புலன் அழுக்குஅற்ற அந்தணாளன் மாக்கட்கு
இனி இடன்இன்றி பரந்து இசைநிற்கப் பாடினார்" **(புறநானூறு: பா.எண் -126 )**

எனும் பாடல் தெளிவுறுத்துகிறது. இப்பாடலில் குறிப்பிடப்படும் வானவன் என்னும் சொல் சேரமன்னனைக் குறிக்கும் கொல்லிமலையைத் தன் நாட்டோடு கொண்டிருந்த வானவன் என்பதை,

"வானவன் கொல்லி" **(அகநானூறு: பா. எண் -33 )**

என்று அகநானூற்றின் 33 ஆவது பாடலும்,

"வெல்போர் வானவன் கொல்லிக் குடவரை"**(அகநானூறு: பா. எண் -133 )**

என்று அகநானூற்றின் 113 ஆவது பாடலும் வானவன் என்னும் பெயருக்குச் சான்றாக அமைகின்றன.

**முடிவுரை**

நப்பசலையார் பாடல்களிலிருந்து நாம் சங்க இலக்கிய காலத்தில் வாழ்ந்த அசுணமா விலங்கு பற்றிய அறிவியல் செய்தியையும், சோழ சேர மன்னர் வரலாறுகளையும், பசலை நயத்தையும் நப்பசலையார் வீரத்தையும், சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் பற்றிய வரலாற்றுச் செய்திகளையும் சோழிய ஏனாதி திருக்கண்ணன் திறத்தையும் பற்றி அறிவதோடு, மன்னனை எதிர்த்துப் பாடும் அளவு துணிவு வாய்ந்தவர் நப்பசலையார் என்பதையும், அவர் சூழலைப் புரிந்துகொண்டு பாடும் திறன் பெற்றவர் என்பதையும் இவ்வாய்வுக் கட்டுரை விளக்குவதாக அமைந்தது.

**துணை நின்ற நூல்கள்**

1.சங்க இலக்கியம் மூலமும் உரையும்,வர்த்தமானன் பதிப்பகம். ஆண்டு- 1993

2. திருக்குறள்,பரிமேலழகர் உரை ,மணிவாசகர் பதிப்பகம்,சென்னை 18.